கவன ஈர்ப்புகள்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை, சைதாப்பேட்டை, வட்டம், கடப்பேரி கிராமத்தைச் சேர்ந்த ரெங்கநாதபுரத்தில் 1—4—1986 அன்று 3-30 மணிக்கு தீ விபத்து ஏற்பட்டது. அதில் 35 குடிசைகள் பாதிக்கப்பட்டன. அதன் காரணமாக சட்டப்படி கொடுக்க வேண்டிய நிவாரணங்கள் அங்கே வழங்கப்பட்டிருக்கின்றன. ஆனால் மாம்பலம் பகுதியில் அப்படிப்பட்ட தீ விபத்து எதுவும் நடைபெறவில்லை. ஆனால் அந்த 35 குடிசைகளுக்கு முறைப்படி வழங்கப்பட வேண்டிய சலுகைகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

(6) சென்னை அம்பத்தூர் இந்தியா போர்ஜ் நிறுவனத்தை மீண்டும் திறப்பது குறித்து.

திரு. கு. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர், அவர்களே, " சென்னை, அம்பத்தூர், இந்தியா போர்ஜ் நிறுவனத்தைத் திறக்க நடவடிக்கை மேற்கொள்ளாததோடு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து அத்தொழிலாளர்களுக்கு நிவாரணம் வழங்கப்படாமையால் ஏற்பட்டுள்ள நிலை குறித்த " அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

சென்னை, அம்பத்தூரிலுள்ள இந்தியா போர்ஜ் அண்டு டிராப் ஸ்டாம்பிங்ஸ் லிமிடெட் என்னும் போர்ஜிங்ஸ் தயாரிக்கும் நிறுவனத்தில் சுமார் 500 தொழிலாளர்கள் பணிபுரிந்து வந்தனர். திரு. குசேலரை தலைவராகக் கொண்ட இந்தியா போர்ஜ் அண்டு டிராப் ஸ்டாம்பிங்ஸ் எம்ப்ளாயீஸ் யூனியன் என்னும் சங்கம் இந்நிறுவனத்தில் இயங்குகிறது.

2. தொடர்ச்சியாக தொழிலில் மந்தம், அதன் காரணமாக உற்பத்தி பொருள்களுக்கு தேவை ஏற்படாதது, உற்பத்தி பொருள் தேக்கம், தொடர்ந்து ஏற்பட்ட நட்டம் ஆகியவற்றின் காரணமாக இந்நிறுவனத்தை 14—1—1984 முதல் மூடுவதாக நிர்வாகம் அறிவித்து பிறகு 19—1—1984 அன்று முதல்தான் நிறுவனத்தை மூடியது. இத் தொழிற் தகராறில் சென்னை, இரண்டாம் தொழிலாளர் துறை துணை ஆணையர் மேற்கொண்ட சமரசப் பேச்சுவார்த்தைகளில் ஒப்பந்தம் ஏற்படாததால் அரசுக்கு அவர் தனது சமரச முறிவறிக்கையை அனுப்பினார். இந்த அறிக்கையின் மீது அரசு ஆணை பிறப்பித்து இத்தொழிற்

கவன ஈர்ப்புகள்

(டாக்டர் இரா. நெடுஞ்செழியன்)

தகராறை சென்னை, தொழில் நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு (Industrial Tribunal) விட்டுள்ளது. (அரசு ஆணை எண். 589, நாள்: 13–3–1984). நீதிமன்றத்தின் தீர்ப்பு எதிர்பார்க்கப் படுகிறது.

3. இந்நிலையில் இருதரப்பினரின் விருப்பப்படி நிறுவனத்தை மீண்டும் திறந்து இயக்குவதற்குண்டான சாத்திய கூறுகள் பற்றி ஆணையர் முன்பும் தொழிலாளர் நல அமைச்சர் முன்பும் பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. பேச்சுவார்த்தைகளின்போது, நிறுவனத்தை சீராக இயக்குவதற்கு உற்பத்தியை அதிகரித்து சுமார் 200 தொழிலாளர்களுக்கு மேல் ஆட்குறைப்பு செய்ய சங்கம் ஒப்புக்கொள்ள வேண்டுமென்று நிர்வாக தரப்பில் கூறப் பட்டது. சங்கத்தரப்பில், இப்பிரச்சினைகளை நிறுவனம் திறந்த பிறகு பேசிக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டது. பேச்சு வார்த்தைகளில் ஒரு இணக்கம் இருதரப்பினர்களிடையே ஏற் படவில்லை. இதன் பிறகு, சங்கம், இந்த நிறுவனத்தின் நிலை பற்றி தெரிவித்து நிறுவனம் நல்ல முறையில் இயங்கக்கூடிய நிலையில் உள்ளதென்றும், அரசால் நியமிக்கக்கூடிய ஒரு திறமை யான நிர்வாகத்தின் கீழ் நிறுவனத்தை ஒப்படைத்து அதை நடத் துவதற்கு ஏற்பாடுகள் செய்யலாமென்றும் தெரிவித்தது. நிறு வனத்தை திறப்பதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி தொழிலாளர் நல அமைச்சர் மற்றும் தொழில் அமைச்சர் முன்பு நடைபெற்ற பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து தொழிலாளர்துறை ஆணை யர் முன்பு மேற்கொண்டு பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வரு கின்றது. நிறுவனத்தைத் திரும்ப இயக்குவதற்கான சாத்தியக் கூறுகளை தொழில் துறையும் ஆய்ந்து வருகிறது.

4. பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ. 200 உதவித்தொகை வழங்க 2–1–1986 நாளைய அரசு ஆணை எண். 6-ல் உத்தரவு கள் பிறப்பிக்கப்பட்டுள்ளது. உதவித் தொகையை திரும்ப அர சுக்கு செலுத்துவதற்கு அரசு கோரியவாறு நிர்வாகம் உத்திர வாதம் தரவில்லை. இருப்பினும் தொழிலாளர்களுக்கு உதவித் தொகை வழங்குமாறு அரசு உத்தரவிட்டு அதன் அடிப்படை யில் 8–4–1986 அன்று 402 தொழிலாளர்களுக்கும் 16–4–1986 அன்று 50 தொழிலாளர்களுக்கும் உதவித் தொகை வழங்கப் பட்டுள்ளது. மீதமுள்ள தொழிலாளர்களும் இத்தொகையைப் பெற உள்ளனர்.

(7) புதுக்கோட்டை, மச்சிவாடி குடிசைப்பகுதியில் ஏற்பட்ட தீ விபத்து.

திரு. ஜே. முகம்மது கனி: மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, "புதுக்கோட்டை மாவட்டம், மச்சிவாடியில் 12–4–1986 அன்று 60க்கும் மேற்பட்ட குடிசைகள் தீ விபத்தி னால் எரிந்து போனதால் சுமார் 300 பேர்கள் தங்குவதற்கு இடம் இல்லாமலும், மற்ற நிவாரண உதவிகள் கிடைக்காமலும்